Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 230

வெள்ளிக்கிழமை 14 ஜூலை 2023

ஆனி 29 … ளுவர் ஆண்டு 2054

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

# சர்வதேச நியமங்களுக்கு அமையவே அகழ்வுகள்!

இப்போது அகழ்வதற்கு நிதி இல்லை

ஓ.எம்.பி.யிடம் கோருவதற்குத் தீர்மானம்

சர்வதேச மேற்பார்வையாளர்களும் வரலாம்

**முல்லைத்தீவு, ஜூலை 14**

**கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழி சர்வதேச நியமங்களுக்கு அமைவாகவே தோண்டப்படும் என்றும் இந்த நடவடிக்கைகளை யாரும் மேற்பார்வை செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் புதைகுழி அகழ்வுக்குரிய நிதியைப் பெற்றுக்கொள்வதில் இடர்கள் இருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.** »11



## நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் அவசியம்

ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 14

நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் இன்றியமையாதது. அரச செலவினங்களைக் »10

## சிறுவனைக் கட்டிவைத்து கொடூரமான தாக்குதல்!

பெற்றோர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 14

9 வயதேயான சிறுவனைக் கட்டிவைத்துத் தாக்கிய குற்றச்சாட்டில் அந்தச் சிறுவனின் பெற்றோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். »10

இந்திய நிதியின் கீழ்

## வடக்கு மாகாணத்துக்கு 32 புதிய பேருந்துகள்!

அவற்றில் 22 யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இந்திய நிதியுதவியின் கீழ் 32 பேருந்துகள் வட மாகாணத்துக்கு வழங்கப்பட்ட நிலையில், »10



ஐந்து மாதங்களின் பின்

## யாழ். - கொழும்பு ரயில் நாளைமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் கொழும்பு இடையிலான நேரடி ரயில் சேவைகள் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தண்டவாள திருத்தப் பணிகளுக்காக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், சுமார் »11

## ஓகஸ்ட் முதலாம் திகதி சொகுசு ரயில் சேவை!

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் கொழும்பு இடையிலான அதி சொகுசு ரயில் சேவையான 'யாழ். ஒடிசி' ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் »11

## நிரந்தர நியமனம் வழங்குமாறு டெங்குப் பணியாளர்கள் போர்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாண டெங்கு களப் பணியாளர்கள், தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை »11

## சமஷ்டியைக் கோருவதற்கு தமிழருக்கு உரித்துண்டு!

பிரதமர் தினேஷ் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 14

சமஷ்டி அதிகாரப் பகிர்வைக் கோருவதற்கு தமிழர்களுக்கு முழு உரிமையும் உள்ளது. அவர்களின் கோரிக்கையை எவரும் உதாசீனம் செய்ய முடியாது - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். »11

## அறைக்குள் இளைஞர் உயிர்மாய்ப்பு: அதிர்ச்சியில் மூதாட்டி மயங்கிச் சாவு!

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற வயோதிபப் பெண், »11

மோடிக்குக் கடிதம் அனுப்பினாலும்

# சமஷ்டிப் பகிர்வு சாத்தியமில்லை!

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 14

'தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரும் சமஷ்டித் தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது. அரசு அதனை அனுமதிக்காது. கூட்டாட்சி என்ற சமஷ்டி எனப்படுவது நாட்டைத் துண்டாடும் என்பது »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பள முரண்பாட்டுக்கு 2 மாதத்துக்குள் தீர்வு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 14**

**கல்வித்துறையில் அனைத்துச் சேவைகளிலும் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் நடவடிக்கை எடுப்போம். இது தொடர்பாக தற்போது கலந்துரையாடப்பட்டு வருகிறது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

புத்தளம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கல்வி ஆரோக்கியத்தின் அபிவிருத்திக்காக அதிபர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதன்பின்னர் ஆசிரியர் பற்றாக்குறை பெரும்பாலும் நீங்கி விடும். அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் கல்வித்துறையில் அனைத்துச் சேவைகளிலும் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக ஆழமான மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தப்படும். தற்போதும் தொழிற்சங்கங்களுடன் மிகவும் சினேகபூர்வ மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார். (எ-இ)

## அமிர்தலிங்கத்தின் நினைவுதினம் நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. வலி. மேற்கு பிரதேசசபையின் அருகிலுள்ள அன்னாரின் திருவுருவச் சிலையடியில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராசா, புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும்பொதுமக்கள் எனப் பலர் அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றனர். (ச-27.125)





## புளொட்டின் வீரமக்கள் தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 34ஆவது வீர மக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. ஜனநாயக மக்கள் விடு தலை முன்னணியின் நினைவு இல்லப் பொறுப்பாளர் ஜி.ரி.லிங்கநாதன் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து கழகத்தின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. (ச-18)

## 'அஸ்வெசும' திட்டத்துக்கு ரூ. 206 பில்லியன் ஒதுக்கீடு

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்கு 206 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் நடத்திய கலந்துரையாடல்களில் வறிய மக்களை அதிலிருந்து மீட்பதற்கு குறைந்தது 187 பில்லியன் ரூபாவை ஒதுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் அதை 206 பில்லியன் ரூபா வரை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது. வெளிப்படைத்தன்மையுடன் மிகவும் பொருத்தமான குழுவுக்கு இதன் கீழ் நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பயனாளர்கள் இந்த மாதத்திலேயே நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டத்தில் சுமார் 20 இலட்சம் குடும்ப அலகுகளுக்கு நன்மைகள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் குடும்ப அலகுகளில் 70 சதவீதமான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)

## இளம்பெண் மரணம்; காரணம் ஊசிகளா?

### விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, ஜூலை 14

வயிற்று வலிக்காகப் பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் பெண் ஒருவர், இரு ஊசிகள் ஏற்றப்பட்டதன்பின்னர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மருத்துவமனையில் கடந்த 11 ஆம் திகதி சேர்க்கப்பட்ட 21 வயதுடைய இளம் பெண், ஊசி ஏற்றப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்துள்ளார். பொத்தபிட்டிய அலகல்ல பகுதியைச் சேர்ந்த சாமோதி சந்தீபனி மதுஷிகா ஜயரத்ன என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 10ஆம் திகதி வயிற்றில் ஏற்பட்ட உபாதை காரணமாக கஹடபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட யுவதி, மறுநாள் நோயாளர் காவு வண்டியில் தனது தாயுடன் பேராதனை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யுவதி காலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மதியம் 12:30 மணியளவில் ஏழாவது விடுதிக்கு அனுப்பப்பட்டார். அங்கு இரு தடவைகள் ஊசி ஏற்றப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

தாயார் மாயா இந்திராணி கூறும்போது, "பிற்பகல் 3.30 மணியளவில் தாதி கனுலா மூலம் மகளுக்கு ஊசி செலுத்தினார். அதை செலுத்தியதும், அம்மா கையில் கடிக்கின்றது என்று மகள் சொன்னாள். நான் அதை தாதியிடம் சொன்னதும், அவர் இன்னொரு ஊசி போட்டார். தாதி அந்த ஊசிபோட்டுவிட்டுதிரும்பிச் சென்றதும், வலி தாங்க முடியாமல் மகள் அலறினாள். அப்போது மகள் சேலைனுடன் கழிவறைக்கு ஓடினாள். ஏன் ஓடுகிறாய் என்று கேட்டு அவள் பின்னால் ஓடினேன். மகள் கீழே விழுந்திருந்தாள். தலை அசைந்து கொண்டிருந்தது. வாயிலிருந்து சளி வந்தது. அவள் முகம் நீலமாக மாறியது. நான் கத்தினேன். அப்போது விடுதியிலிருந்து தாதி ஓடி வந்து மகளைத் தூக்கிக்கொண்டு சென்றார். அவளைப் படுக்க வைத்து மார்பில் அழுத்தம் கொடுத்து சுவாசத்தை சீராக்க முயன்றனர். ஆனால் என் மகள் மீண்டும் கண் திறக்கவில்லை. தயவு செய்து என் குழந்தையை காப்பாற்றுங்கள் என்று அழுதேன். என் குழந்தைக்கு ஏன் இப்படி மருந்து கொடுத்தீர்கள் என்று சத்தம் போட்டுக் கேட்டேன். எல்லோரும் பயத்துடன் பார்த்தார்கள். நன்றாகப் பேசிக்கொண்டிருந்த குழந்தை இந்த ஊசி போட்டதால் இறந்தாள்" என்றார்.

சம்பவம் தொடர்பில் பேராதனை போதனா மருத்துவமனை நிர்வாகத்தைக் கேட்டபோது, பேராதனை மருத்துவமனை மற்றும் பேராதனை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவித்தனர். (எ-இ)

## சந்தையில் இந்திய முட்டை: கூட்டுத்தாபனமே பொறுப்பு

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சந்தையில் காணப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும், அரச வணிக கூட்டுத்தாபனமே ஏற்க வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட முட்டைத் தட்டுப்பாடு காரணமாக, வெதுப்பகங்களுக்கும், சிற்றுண்டிச்சாலைகளுக்கும் வழங்குவதற்காக இந்தியாவில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. எனினும், இந்த முட்டைகளை சந்தையிலும் காண முடிகின்றது என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, இந்த விடயம் தொடர்பில், ஆராய்வதற்கு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன் என்று தெரிவித்தார். உரிய முறையில் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாவிட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படும் எனவும் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## தரமில்லாத மருந்துகளை இறக்குமதி செய்யவில்லை



### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

தரமற்ற மருந்துகளை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கவில்லை என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் விசேட மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற சுகாதாரத் துறையின் தற்போதைய நிலை தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்;

சில மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்படும் போது அவற்றில் சிக்கல்கள் ஏற்படுமாயின், அதனை ஆய்வுக்குட்படுத்தி அந்த மருந்துப் பாவனையை தவிர்ப்பதற்குப் பொருத்தமான முறையை சுகாதார அமைச்சு மேற்கொள்கிறது. தற்போது நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 80 வீதமானவை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவை இந்தியத் தூதரகத்தின் பூரண அனுமதியுடன் விநியோகிக்கப்படுகின்றன. இந்த மருந்துக்கொள்வனவு இன்று நேற்றல்ல காலாதிகாலமாகவே நடைபெற்றுவருகின்றது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு நாடகமே

## சிவில் சமூக அமைப்புகள் கூட்டாகச் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 14**

**இலங்கையின் கடந்தகால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் எவையும் தற்போது வரை நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், புதிதாக உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கான உத்தரவாதம் என்ன? வெளிப்படையாகப் பேசும் பாதிக்கப்பட்ட தரப்பினர் பலதரப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிவரும் பின்னணியில், அவர்களை மீண்டுமொருமுறை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு கோருவது நியாயமானதா?**

- இவ்வாறு சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாகக் கேள்வி எழுப்பியுள்ளன.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையிலான கூட்டறிக்கையொன்றை 15 சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தன. அந்த அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதில் உள்ளதாவது:

இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்படும் எந்தவொரு ஆணைக்குழு அல்லது நியாய சபையிலும் பாதிக்கப்பட்ட சமூகம் நம்பிக்கையற்றதாகக் காணப்படுகிறது. இந்த விடயத்தில் கடந்தகால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் உண்மையை கண்டறியும் செயன்முறை மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றம் இழைத்தோரை பொறுப்புக்கூறச் செய்யும் செயன்முறை ஆகியவற்றை இழுத்தடிக்கும் நோக்கம் கொண்டதாகவே அமைந்திருந்தது. கடந்தகால ஆணைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளில் பெரும்பாலானவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பொதுமக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்துமேயானால், முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றைத் தயாரித்தல், பாதிக்கப்பட்ட தரப்பினர் மீண்டும் வாக்குமூலம் வழங்குவதைத் தவிர்க்கும் வகையில் முன்னைய ஆணைக்குழுக்களிடம் வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைத் தொகுத்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்ட மூலத்தை மீளாய்வு செய்தல், இதன்போது ஆலோசனைச் செயலணி முன்வைத்த பரிந்துரைகளை கவனத்திற்கொள்ளல், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் பெரிய மனிதப்புதைகுழிகள் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறுபட்ட விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்தாமல் அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குமேயானால், அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் - என்றுள்ளது.

(எ-இ)

*நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க*

## மூன்று நாடுகளுடன் இலங்கை அரசு பேச்சு


இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் தொடர்பாக தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் வெளிவிவகார அமைச்சு பேச்சுகளை முன்னெடுத்துள்ளது.

நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில், இந்த முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் விசேட ஒத்துழைப்புக்களை வழங்கிவருகின்றன. தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையில் அமைக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை தென்னாபிரிக்காவும், இந்த ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவைத் தயாரிப்பதற்கான ஒத்துழைப்புக்களை சுவிட்ஸர்லாந்தும், இதற்குரிய நிதி உதவியை ஜப்பானும் வழங்குகின்றன என்று அறிய முடிகின்றது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிஸுகொஷி ஹிடேகி, இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபக்ளெர் மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சன்டைல் எட்வின் ஸ்கால்க் ஆகியோருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி அனைத்துத் தரப்புகளும் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (எ-இ)

## வல்வையில் சிறுமி கடத்தல் விளக்கமறியலில் 6 பேர்



வல்வெட்டித்துறையில் 15 வயதுச் சிறுமியைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 6 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் 15 வயதுச் சிறுமியொருவர் கடத்தப்பட்டுள்ளாரென வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணையில் சிறுமி இளைஞரொருவருடன் தலைமறைவாகி விசுவமடுவில் வசிப்பதாகத் தெரியவந்தது. அதற்கமைய அங்கு பொலிஸார் விரைந்தபோது அவர்கள் அங்கிருந்து தப்பிய நிலையில் இளைஞனின் தாயாரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அதனையடுத்து இளைஞனும் சிறுமியும் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகிய போது சிறுமிக்கு குழந்தை பிறந்து 13 நாள்களாகின்றமை தெரியவந்துள்ளது. தற்போது சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறுமியைக் கடத்துவதற்கு உடந்தையாக இருந்தமை மற்றும் ஆதாரங்களை அழித்தமை ஆகிய குற்றச்சாட்டில் ஆறுபேரைப் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்படுத்தினர்.

குறித்த அறுவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-26)




குடிகாரன் பேச்சும் பொலிஸ்காரரின்ர ரூல்ஸும் விடிஞ்சாப் போச்சு. கொஞ்சநாளைக்கு முதல் யாழ்ப்பாணத்தில் அறம்புறமா அக்சிடெண்டுகள் நடந்தவுடன, பொலிஸ்காரர் 'இனிமேல் எல்லா இடமும் கண்காணிப்பை இறுக்கமாக்கப் போறம். ரவுணுக்குள்ள போக்குவரத்து ரூல்ஸை ஒருத்தரும் மீற ஏலாது. அந்தளவுக்கு கண்ணுக்க எண்ணெய் விட்டுக்கொண்டு திரிவம்' எண்ட மாதிரி அறிக்கையெல்லாம் விட்டிச்சினம். ஆனால், அப்பிடி எந்தக் கண்காணிப்பும் நடக்கிறதாவோ, போக்குவரத்து ஒழுங்கா நடக்கிறதாவோ எந்தச் சிலமனும் இல்லை.

முந்தின மாதியே சனநடமாட்டம் கூடின றோட்டுகளிலகூட, பகல்நேரத்தில மணித்தியாலக் கணக்கா பெரிய வாகனங்கள் அரைவாசி றோட்டை மறிச்சபடிதான் நிக்குதுகள். '2கே கிட்ஸ்' கொம்பு வைச்ச ஹெல்மெட்டால முகத்தை மறைச்சபடி ரியூசனால போற பொம்பிளைப் பிள்ளையளுக்கு முன்னால மோட்டர் சைக்கிளில பாம்பு டான்ஸ் மாதிரி வெட்டி வெட்டி ஓடுறதும் ரவுண் நீளத்துக்கு நடக்கத்தான் செய்யுது. ஒருவழிப்பாதைக்குள்ளாலை பலவழியில போறதும் மாறாத மரபா இருக்குது.

அதைவிட, யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டைச் சுத்திவரத்தான் அங்கயிஞ்சை எண்டு அரங்கேலாத நெரிசல். அதுவும் பழக்கடை இருக்கிற பக்கம் இன்னும் அமளி கூட. ஒருபக்கம் ஓட்டோக்கள் நிக்க, மற்றப்பக்கம் பழக்கடையள் இருக்க நடுவுக்குள்ளால வாகனங்கள் அனுங்கிக் கொண்டு போக, எப்பவும் அந்த றோட் நெரிபட்டுக்கொண்டுதான் இருக்கும். இந்த நெரிபாட்டுக்குள்ள சில பழக்கடைகாரர் அதால போய்வாறவையை கையைப் பிடிச்சு இழுக்காத குறையா, தங்கட கடைக்கு வரச்சொல்லிக் கூவுவினம். ஏதோ வியாபாரத் தந்திரம் எண்டு இதை கடந்துபோன காலம் மலையேறிப்போச்சு. முந்தி கொழும்பு பெற்றாவில என்ன நடக்குமோ அதுதான் இப்ப பழக்கடை இருக்கிற ஏரியாவில நடக்குதாம். பழங்களின்ர விலையைக் கேட்டிட்டு விட்டிட்டு போக ஏலாதாம். முதல்ல கெஞ்சிக் கூப்பிட்டவை பிறகு சண்டித்தனம் காட்டுகினம் எண்டு சனம் ஒரே முறைப்பாடு. அதைவிட றோட்டால போய்வாற பொம்பிளைப் பிள்ளையளோடையும் 'டபிள் மீனிங்கில' கதைக்கினமாம். காது கூசுறளவுக்கு அவையின்ர கதையள் இருக்கிறதால, அதால முதல் போன பிள்ளைகள் எல்லாம் இப்ப வேற பாதையளாலதான் போய்வருகினம். எல்லாப் பழக்கடைகாரரும் அப்பிடியெண்டில்லை. சிலர் தான் இந்த விளையாட்டு.

கிட்டடியில இப்பிடி ஒரு பிள்ளையோட சேட்டை விட்டவருக்கு, நாலுபேர் சாத்தியிருக்கிறாங்கள். ஆனாலும் அப்பிடிச் சேட்டை விட்டவரை வெளியில விட்டிட்டு சாத்துப்படி குடுத்தவையை மட்டும் தான் பொலிஸ் பிடிச்சிருக்கு. பிடிச்சால் பிழை செய்த ரண்டு தரப்பையும் தானே பிடிக்கோணும். அதைவிட பொலிஸ்காரர் உப்பிடிச் சேட்டைக்காரரை கவனிச்சிருந்தால், ஏன் சனம் சாத்துப்படியில இறங்கப்போகுதுகள்?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்தை முருகனுக்கு செவ்வாய் கொடியேற்றம்

அம்பாறை, ஜூலை 14
உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
திருவிழாவில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மறு நாள் 3 ஆம் திகதி வைரவர் பூசையும் நடைபெறவுள்ளன.
அதேவேளை உகந்தைமலை முருகன் ஆலய பாதயாத்திரிகர்களுக்கான ஏற்பாடுகள் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-ரி-22)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால்சிலபிரச்சினைகள்ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம் :** அதிர்ஷ்டகரமான நாள். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உறவினர்களால் பிரச்னை ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவி னரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண் டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற் சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிடிவாதப் போக்கை மாற்றவும் குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் கவனம் தேவை.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வரு வார்கள். மகிழ்ச்சி தரும்.

## அலங்காரத் திருவிழா

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி, நாதன் குடியிருப்பு புன்னை நீராவி நந்தவன நாகபூஷணி அம்பாள் கோவில் அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் உற்சவம், ஆடிப்பூர தினத்தன்று விசேட அபிஷேகத்துடன் நிறைவு பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி-9)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 14
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் மனிதவள முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடலுக்கான ஆங்கிலக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ய)

★★★★

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் கல்விமாணி (ஆரம்பக் கல்வி) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ய)






சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் 50 ஆயிரம் ரூபா உதவித்தொகை நேற்று வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. மேலும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபருடனும் எதிர்காலத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஓ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சம்பந்த இரகசியம்!

இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்கவுள்ளார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஓராண்டு கழித்தே இந்தியாவுக்கு அவரால் பயணப்பட முடிந்திருக்கின்றது. வழமைபோன்று இந்த விவகாரத்தை ஒட்டி தமிழ்த் தேசியப் பரப்பில் குழப்பங்களும் எழாமலில்லை. இந்தியாவை ஒட்டிய விவகாரம் என்றால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஒரு தரப்பும், அதற்கு எதிராக இன்னும் ஒரு தரப்பும் கிளம்புவது வழமை. கடந்த 14 ஆண்டுகளாக அதுவே நடந்து வருகின்றது. இந்தக் குழப்பங்களை வைத்தே தென்னிலங்கையும் சரி, இந்தியாவும் சரி தமிழர் தரப்பை ஏய்த்து வருகின்றன. இப்போது இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதும் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.


ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியே இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதும் விவகாரத்தைத் தொடக்கி வைத்திருந்தது. அந்தக் கட்சியில் இருப்பவர்கள் முன்னாள் ஆயுதக் குழுக்கள். ஜனநாயகப் போராளிகள் கட்சி (தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள்) தவிர்ந்த ஏனைய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்திருந்தன. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரியிருந்தது. இந்தக் கடிதத்தில் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளிடமும் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விதிவிலக்கு) கையெழுத்து வாங்குவது என்று தீர்மானித்திருந்தது. அதற்கு தமிழ் மக்கள் கூட்டணி – விக்னேஸ்வரன் தரப்பு இணங்கியது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா என்றபோதும் அந்தக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தனேவிடயங்களைத்தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதாலும், இன்றுவரையில் வயது மூப்பு – அரசியல் மூப்பின் அடிப்படையில் தமிழ்ப் பரப்பில் மதிக்கப்படும் ஒருவராக இருப்பதாலும் அவரிடம் கையெழுத்து வாங்குவதற்குத் தீர்மானித்தது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி.

13ஆவது திருத்தத்தை மாத்திரம் வலியுறுத்துவதால் அதில் கையெழுத்திடமுடியாது என்று சம்பந்தன் மறுத்துவிட்டார். மக்கள் 13 ஆவது திருத்தத்துக்கு ஆணை வழங்கவில்லை என்றும் வியாக்கியானம் கூறினார். இதற்கு மேலாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு முதல் தடவையாக 2015 ஆம் ஆண்டு பயணம் மேற்கொண்டபோது நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். 'கூட்டுறவுச் சமஷ்டி' அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் கருத்துரைத்திருந்தார். இதனைச் சுட்டிக்காட்டிய சம்பந்தன், இந்தியாவே, 13ஆவது திருத்தத்தைத்தாண்டி கூட்டுறவுச் சமஷ்டி என்பதை வலியுறுத்தும்போது நாம் ஏன் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரவேண்டும்? என்று கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால், இந்தியத் தூதுவரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடும்போது, 'கூட்டுறவுச் சமஷ்டி' என்பதைச் சம்பந்தர் கெட்டித்தனமாகத் தவிர்த்துவிட்டார். இந்திய – இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றே சம்பந்தரும் இந்தியத் தூதுவரிடம் குறிப்பிட்டுள்ளார். 'கூட்டுறவுச் சமஷ்டி' என்பதைச் சுட்டிக்காட்டி அத்தனை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதை சம்பந்தன் ஏன் தவிர்த்தார் என்பதே இப்போதுள்ள கேள்வி? இந்திய– இலங்கைஒப்பந்தம்என்பதுவேறு. அதன்ஊடாக உருவான 13 ஆவது திருத்தச் சட்டம் என்பதுவேறு.

ஆனால், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கடிதத்தில் கையெழுத்திட இந்தியப் பிரதமர் கூறியதைக் குறிப்பிட்டே மறுத்த சம்பந்தன், தூதுவருடனான சந்திப்பில் மாத்திரம் அதனைத் தவிர்த்தமை அல்லது அதைச் சொல்லத் தயங்கியமைக்கான காரணம்தான் [illegible] அதைச் 'சம்பந்த இரகசியம்' என்று சொல்லலா[illegible]?

## நாளொரு நல்வார்த்தை

"உன்னை நீ நம்பத் தொடங்கி விட்டால் நீ உலகில் வெற்றியுடன் வாழக் கற்றுக்கொண்டு விட்டாய் என்று பொருள்" – கோயத்




# ஹரி ஆனந்தசங்கரிக்கு நுழைவிசைவு மறுப்பு!

## பழிவாங்குகிறதா இலங்கை?



**கொழும்பு, ஜூலை 14**

**கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி இலங்கை வருவதற்கு நுழைவிசைவு வழங்க இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

இந்தத் தகவலை ஹரி ஆனந்த சங்கரி தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

கொடும்பாவியை எரிப்பது இலங்கை அரசாங்கங்களின் தவறுகளைச் சரி செய்யாது. கவலையளிக்கும் விதத்தில் எனக்கு நுழைவிசைவு வழங்க இலங்கை மறுத்துவிட்டது. நாங்கள் முன்னெடுத்துள்ளவேலைத் திட்டத்துக்காக பழிவாங்கும் நடவடிக்கை இது. எங்களை மௌனமாக்க முடியாது என்று அவர் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் அரசாங்க ஆதரவாளர்கள் கனடாப் பிரதமர் மற்றும் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். கனடாவின் தமிழர் சார்பு நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(எ-இ)



## எண்ணெய்க் குழாய்த்திட்டம்: இலங்கை – இந்தியா பேச்சு

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு எண்ணெய்க் குழாய் அமைப்பது தொடர்பான ஆலோசனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான சந்திப்பு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பால்லே உட்படப் பலர் பங்கேற்றனர். எரிபொருள் விநியோகத்தை விரிவுபடுத்துவதும், மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது தடுப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பருப்பு என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட உழுந்து

### சுங்கப்பிரிவு கைப்பற்றல்

கொழும்பு, ஜூலை 14

பருப்பு எனக் கூறி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 39 ஆயிரம் கிலோ உழுந்து நேற்றுமுன்தினம் சுங்கப் பிரிவால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுங்க வரி செலுத்தப்பட்ட இரண்டு கொள்கலன்களைச் சோதனையிட்ட போது இந்த உழுந்து மீட்கப்பட்டுள்ளது. அதன் சந்தைப் பெறுமதி சுமார் 62 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடி குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி)

**நாளை** 15.07.2023 சனிக்கிழமை ஆனி 30

சுபநேரம் : 03.00 – 04.30
ராகுகாலம் : 09.00 – 10.30

சனிப் பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சரோஜினிதேவி



பிறப்பு 22.06.1938 இறப்பு 13.07.2023

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிட மாகவும் 5ஆம் வட்டாரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கந்தையா சரோஜினிதேவி அவர்கள் நேற்று (13.07.2023) வியாழக்கிழமை அதி காலை 2 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்.

5ஆம் வட்டாரம், நயினாதீவு.

(CS 25524) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 12 . 1941



இறப்பு 13 . 07 . 2023

### திருநாவுக்கரசு பூமணி

நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பூமணி அவர்கள் நேற்று (13.07.2023) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா சின்னத்தங்கச்சியின் மகளும், இளையதம்பி சின்னம்மாவின் மருமகளும், இளைதம்பி திருநாவுக்கரசின் மனைவியும், கனகரத்தினம், நவமணி, காலஞ்சென்ற இராசதுரை, இரத்தினத்தின் சகோதரியும், ரஞ்சினி, ரோகினி, சிவாஜினி, சுதாஜினி, முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரன் காலஞ்சென்ற குகானந்தபவன் மற்றும் ஞானமுரளி, சஞ்சீவ், செல்வரஞ்சினியின் பாசமிகு மாமியாரும், ராகுலன், திஷங்கர், அபிநாஸ், நிருஜா, பிரணவன், கோபிநாத், கோபிராம், மதுசிகன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2023) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் : குடும்பத்தினர்.

077 9015 653
077 9426 719

# சாரம், ரி சேர்ட்டுடன் தேரரின் உடல் மீட்பு!

கொழும்பு, ஜூலை 14

ஹுதரலியத்த தம்பிட விகாரையின் பிரதமகுரு முருத்தெனிய சீலரதன தேரர், சாரம் மற்றும் ரி சேர்ட்டுடன், தொப்பி அணிந்த நிலையில் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிக்குவின் சடலம் நேற்றுமுன்தினம் காலை விகாரையில் இருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் வீதியில் கண்டெடுக்கப்பட்டது. 67 வயதான பிக்குவே சடலமாக மீட்கப்பட்டார். சடலத்தின் அருகே காய்கறிகள் உள்ள பை கண்டெடுக்கப்பட்டது. வீதியில் ஒருவர் விழுந்து கிடந்ததை அவதானித்த மக்கள், அவர் யார் என ஆராய்ந்தபோது, விகாரையின் தலைமை விகாராதிபதி என்பது தெரிய வந்தது.

இவர் கடந்த 10ஆம் திகதி இரவு விகாரையிலேயே தங்கியிருந்துள்ளார். அவர் நள்ளிரவில் விகாரையை விட்டு வெளியேறியிருக்கலாம் என்றும், திரும்பி வரும் வழியில் அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விகாரையில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இடத்துக்கு மாறுவேடத்தில் பிக்கு பயணித்திருக்கலாம் என்றும் பொலிஸாருக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

பிக்கு சடலமாக கிடந்த இடத்தில் அவரது கைத்தொலைபேசியும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ததன் மூலம் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண முடியும் என பொலிஸார் தெரிவித்தனர் பிக்கு மாறுவேடத்தில் விகாரையை விட்டு வெளியேறி, யாரையோ சந்திக்கச் செல்லும் முன், சந்திக்கச் சென்ற நபரிடமிருந்து தேரருக்குத் தொலைபேசியில் அழைப்பு வந்துள்ளது என்று பொலிஸார் நம்புகின்றனர்.

பிக்குவின் உடலில் தாக்கப்பட்டதற்கான அடையாளங்களோ அல்லது வாகனம் விபத்துக்குள்ளானதற்கான அடையாளங்களோ இல்லை என பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

இழுவைமடியில்

# கடலட்டை பிடித்த 9 மீனவர்கள் கைது

மன்னார், ஜூலை 14

மன்னார் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 9 மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினருடன் இணைந்து மன்னார் கடற்றொழில் திணைக்களம் கடற்பரப்பில் கள ஆய்வில் ஈடுபட்டபோது இந்தக் கைது இடம்பெற்றது. 3 படகுகளில் தடைசெய்யப்பட்ட இழுவைமடியை பயன்படுத்தி கடலட்டை பிடித்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் உப்புக்குளம், பள்ளிமுனையைச் சேர்ந்த மீனவர்களே கைதாகினர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் மன்னார் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-ரி3-60)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய்.
## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-05, மானிப்பாய் வீதி, ஆதன இலக்கம் 26/18இல் பூதப்பிள்ளை இராமலிங்கம் எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தினை ரமேஸ் மகள் நிரோஜி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனமானது வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை, வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, கிராம அலுவலர் பிரிவு J/263 இல், "கொங்கராயன் சீமா" நிலப்பரப்பு 3,7/8உம் கிணறும் வீடும். இது நில அளவையாளர் திரு.N. தேவராஜன் அவர்களால் 1972.01.27ஆம் திகதி 540ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு-1 எனக் குறித்த படி நிலபர.03 குளி 10.6 இதில் தெற்குப் பக்கமாக நில.பர. 01 குளி 14.3உம் இதற்குள்ளடங்கிய வீட்டுப் பாகமும் கிணறும். இது நில அளவையாளர் திரு.S.K, சிவானந்தன் அவர்களால் 2022.05.17ஆம் திகதி 5664ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 என குறித்த படி நில.பர 01 குளி 12.47ம் அதற்குள்ளடங்கிய வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் இதன் எல்லைகள் கிழக்கு ஒழுங்கை வடக்கு கணேசபதி சதீஸ் மகள் டிலானியின் ஆதனம், மேற்கு அம்பலவாணர் மதியாபரணம் பெண் பூமாதேவியின் ஆதனம், தெற்கு பஞ்சரத்தினம் மனைவி புஸ்பராணியின் ஆதனம் இதடங்கலும். இன்னும் குறித்த படத்தில் துண்டு 2 எனக்குறித்த பாதை முகப்பும் குறித்த 5663ஆம் இலக்கப் படத்தில் குளி 04.34 விஸ்தீரணமான பாதை நிலத்தில் இதற்குரிய பாதைப் பாவித்துரித்தும் இதடங்கலும் என ஆதன அட்டவணை குறிப்பிட்டும், இவ்வாதனத்திற்கு பிரசித்த நொத்தாரிசு செல்வி நிருபா பாலசிங்கம் முகதாவில் 2018.07.15ஆம் திகதி 449ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கணேசபதி ரமேஸ் அவர்களின் சீவிய உரித்திற்கு அமைவாக ரமேஸ் மகள் நிரோஜி சொந்தக்காரர் என்றும், இவ்வாதனத்திற்கு தனியாக நில அளவைப் படம் இல்லாத காரணத்தினால் இவ்வாதனத்தை நில அளவையாளர் S.K.சிவானந்தன் அவர்களால் 2022.05.17ஆம் திகதி 5664ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 எனக்குறித்த நிலப்பரப்பு 01 குளி12.47ம் அதற்குள்ளமைந்துள்ள கிணறும் வீட்டுப்பாகமும் செய்பயிர் வான்பயிர் அனைத்தையும் உறுதி செய்து பதிவு செய்வதற்காகவும் இப்பிரகடன உறுதி எழுதிக்கொள்வதாகவும் குறிப்பீட்டு பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால், 2022.06.11ஆம் திகதிய 12740ஆம் இலக்க பிரகடண உறுதி எழுதப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாதனத்தின் முற்பட்ட உறுதிகள், ஆதன வரலாற்று சுருக்கப் பிரதிகள்(தோம்பு) 1990.02.06ஆம் திகதியிலிருந்து ஏறத்தாள 33வருடங்கள் சீராக காணப்படுகின்ற போதிலும் 06.02.1990ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு பாலித தர்மபால குணசேகர அவர்களால் எழுதப்பட்ட 5803ஆம் இலக்க உறுதி மூலம் முத்துகந்தசாமியும் மனைவி அன்னலட்சுமியும் மக்கள் வங்கியிடமிருந்து கொள்வனவு செய்த உறுதிக்கு முற்பட்ட உறுதிகளோ தோம்புகளோ குறித்த உறுதியில் காட்டப்படவில்லை என்பதுடன், விண்ணப்பதாரராலும் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் உரும்பிராய் உப அலுவலகத்திலுள்ள ஆதனவரிப் பதிவேட்டுப் பெயரிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளில் குறிப்பிடப்பட்ட பெயரிற்கும் தொடர்பும் காணப்படவில்லை.

எனவே இவ்வாதனத்தினை ரமேஸ் மகள் நிரோஜி என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தகுந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2023.07.28 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ரமேஸ் மகள் நிரோஜி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்

2023.07.14
திகதி

செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

(CS 25523) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Royal College Of Jaffna**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயிலலாம்.

வாரம் 04 நாள்கள் வகுப்புக்கள் நடைபெறும்.

ஆசிரியர் - விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (25 வருட அனுபவம்) (CS/51233)AH

பிரான்பற்று வீதி, சங்கானை.

077 675 1649



**தேவை**

யாழ். நகரில் இயங்கும் பல் கட்டும் நிலையத்துக்குப் பெண் உதவியாளர் தேவை. (யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள்) (CS/51235)AH-1

077 576 6595



பழைய மாணவர் வாரம்

## கருத்துப் பகிர்வு

**யாழ்ப்பாணக் கல்லூரியில் இரு நூற்றாண்டுக் கல்விப் பணி: வரலாறு மற்றும் எதிர்காலத்துக்கான பார்வையும் பாதைகளும்**

தலைமை



திருமதி. ருஷிறா குலசிங்கம்
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி

உரையாளர்கள்



அதி வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன்
(முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனம் & முன்னாள் அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)

மைல்கற்கள்



கலாநிதி. தர்சன் அம்பலவாணர்
(இயக்குநர், பரி. யோவான் தொழிற்பயிற்சி நிலையம், மட்டக்களப்பு)

கிறீஸ்தவப் பாடசாலைகளும் ஜனநாயகத்தினை உருவாக்குதலும்



திருமதி. ஷிராணி மில்ஸ்
(நிருவாக இயக்குநர், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் & முன்னாள் அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி)

தொடர் கற்றல்: ...ராம் நூற்றாண்டுக்காக எம்மைத் தயார்படுத்தல்



கலாநிதி. கெங்காதரஐயர் சர்வேஸ்வரன்
(கணினி விஞ்ஞானத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

எதிர்காலத்திற்குத் தயாராதல்: திறன்களும் தொழில்நுட்பங்களும்

இடம்: ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி
காலம்: புதன்கிழமை, 19 ஜூலை 2023, பிற்பகல் 6 மணி முதல் 7 மணி வரை

அனைவரும் வருக!

யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்



பழைய மாணவர் வாரம்

## பொதுக் கூட்டம்

**யாழ்ப்பாணக் கல்லூரியில் இரு நூற்றாண்டுக் கல்விப் பணி: கூட்டிணைவுடன் எதிர்காலத்தினைச் சிந்தித்தல்**

ஒருங்கமைப்பாளர்:



திரு. தேவராஜா எதிராஜ்
(யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபைக்கான பழைய மாணவர் பிரதிநிதி)

ஆரம்ப உரைகள்:



அதி வண. அருட்கலாநிதி. வே. பத்மதயாளன்
(தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபை & பேராயர், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனம்)



திருமதி. ருஷிறா குலசிங்கம்
(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)

உரைகளைத் தொடர்ந்து கூட்டத்திலே கலந்துகொள்ளுவோர் பங்கேற்கும் திறந்த உரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

இடம்: ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி
காலம்: புதன்கிழமை, 19 ஜூலை 2023, பிற்பகல் 7 மணி முதல் 8.30 மணி வரை

அனைவரும் வருக!

யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்


போதையில் பஸ் சாரத்தியம்

## ஒரு மாதகால சிறையுடன் அனுமதிப்பத்திரமும் ரத்து

போதையில் தனியார் பேருந்தைச் செலுத்திய ஒருவரின் சாரதி அனுமதிப் பத்திரம் ஒரு வருடத்துக்கு ரத்துச் செய்யப்பட்டதுடன் ஒரு மாத சிறைத்தண்டனையும் விதித்து பருத்தித்துறை நீதிமன்று நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை - கொடிகாமம் மார்க்கத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்தின் சாரதியொருவர் மதுபோதையில் நிதானமின்றி சாரத்தியம் செய்துள்ளார்.

இதுகுறித்து நெல்லியடிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பேருந்தின் சாரதியை சோதனை செய்தபோது மதுபோதையில் சாரத்தியம் செய்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து குறித்த சாரதியை கைது செய்த பொலிஸார் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதன்போது குறித்த சாரதியின் அனுமதிப்பத்திரத்தை 12 மாதங்களுக்கு ரத்துச் செய்ததுடன் ஒருமாத சிறைத்தண்டனையும் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.

(ச-இ)


**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து)**

**கூறுவிலை கோரல்**

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிலையத்திற்கு வர்ணம் பூசுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் படிவத்தினை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்று 21.07.2023ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 0830 (cr.37254) (N.1)



**கிருஷ்ணா அடைவு கடை**

பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 30.09.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி (15.09.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.09.2023) ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:-**
2022 ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 30 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 490 0311
021 222 5180

உரிமையாளர்
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5046



# WE'RE HIRING @ Jaffna

Are you passionate about building things? Does solving hard problems drives you? You have a curiosity to learn new things and you take pleasure in applying them to solve real-life problems?

We may have a job for you if you also like to work on products that involve web apps, mobile apps, scalable and secure backend architectures on the cloud, edge device-to-cloud communication, and on-device data processing. You should enjoy and be able to wear multiple hats in a few of these areas.

Some of the specific skill sets/experience we are looking for are React, Java, experience building AWS services, SQL, Linux scripting, and experience working with embedded devices.

**Front - end Developer**

**Requirements and Qualifications:**

- Bachelor's Degree in Computer Science/Software Engineering/IT.
- Strong proficiency in JavaScript, HTML5, CSS3, & responsive web design.
- Experience in developing complex web applications using React js, Redux, npm, and related libraries and frameworks.
- Experience in cloud technologies such as AWS (Preferred) or GCP.
- Experience in using Git & GitHub.

**Software Engineer**

**Requirements and Qualifications:**

- Bachelor's Degree in Computer Science/Software Engineering/IT.
- Hands-on experience in Java and frameworks such as spring boot.
- Hands-on experience in React JS or any other front-end frameworks.
- Experience in cloud technologies such as AWS (Preferred) or GCP.
- Experience in developing and implementing REST APIs.
- Experience in using Git & GitHub.

**Send us your CV/ Resume**
**info@axallant.com**

(Cs 51237) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN INDIA

## SSM COLLEGE OF ARTS & SCIENCE

இலங்கை UGC யினால் அங்கீகரிக்கப்பட்ட University Campus

( Approved by Govt.of Tamilnadu and Affiliated to Periyar University, Salem )

KOMARAPALAYAM, TAMIL NADU, INDIA

### நேரடி நுழைவு மற்றும் உயர் கல்வி வழிகாட்டல் நிகழ்வு

**JAFFNA**
நாள் : 16 & 17-07-2023
Tilko City Hotel, Jaffna
Mr.S.Mugundan 0703333207
Mr.N.Thileepan 0777224110
International Merit Campus
Chankanai
0703333207 / 0760055552

**MANNAR**
நாள் : 18-07-2023
மாவட்ட செயலக
ஒன்று கூடல் மண்டபம்
மன்னார்
காலை : 9.30 மணியளவில்
Mr.Thiruchelvam
0779696873
Infinity Center for Higher Studies

**VAVUNIYA**
நாள் : 20-07-2023
Infinity Center
for Higher Studies
Mohan Complex,
7th Lane, Mannar Road
Mr.Suresh
0775970800

*Admissions Open*
அட்மிஷன் நடைபெறுகின்றது

100 %
சிறந்த வேலைவாய்ப்பு

**UG COURSES**
BCA.,
B.Sc., Computer Science
B.Sc., Artificial Intelligence & Data Science
B.Sc., Visual Communication
B.Sc., Bio Technology
B.Sc., Textile & Fashion Designing
B.Sc., Hotel Management & Catering Science
BBA.,
B.Com.,
B.Com., Computer Applications
B.Com., Accounting & Finance
B.Lit., Tamil

**PG COURSES**
MA., English | M.Com.,
M.Sc., Computer Science, Maths
Textile & Fashion Designing

**RESEARCH PROGRAMMES**
M.Phil., & Ph.D.,

- சிறந்த அனுபவமிக்க பேராசிரியர்கள்.
- உலக தரத்திலான சிறந்த ஆய்வகங்கள்.
- மிகவும் பாதுகாப்பான இருபாலர்க்கான விடுதி வசதி.
- சிறந்த நாட்டு நலப்பணி திட்ட சேவைக்காக ஜனாதிபதியிடம் விருது பெற்ற கல்லூரி.

*We Create Success*



Email: admissionssmcas@gmail.com SSM Educational Institutions SSM College of Arts & Science

**Contact No : +91 97900 16645, +91 97900 12550**


## கேள்வி அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை -2023**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.**

01. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை - 2023 மூலமான ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் *(Black List)* சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான *C8/ C7 / C6* தரத்தில் வீதி அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை** (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு **(தொலைபேசி: 021 229 1023** e.mail - pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற் கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணி வரை 27.07.2023 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 14.06.2023 ம் திகதியிலிருந்து 27.07.2023 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **3000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 28.07.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (13.10..2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ருபா) | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/MU/PTK/PS/2023/01 | CONSTRUCTION OF INTHUPURAM MAIN ROAD | 6.52 | 91 நாட்கள் | C8/C7/C6 | 75,000.00 | 10/11/2023 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 21.07.2023 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு**
**14.07.2023**

(CR/3725300AH-1

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் வேலணை சமுர்த்தி வங்கியின் உதவி முகாமையாளராக கடமையாற்றும் **க.விஜேந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா சறோஜினிதேவி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

தோற்றம் : 22.06.1938
மறைவு : 13.07.2023

பிரிவின் துயரில்:
பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
18 • 05 • 1952



விண்ணில்
11 • 07 • 2023

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டவரும்

**சுந்தரேஸ்வரியின்** அன்புக் கணவரும், **வித்தியா, நித்தியா, கஜேந்திரன்** ஆகியோரின் அன்புத் தந்தை

**திரு.சுப்ரமணியம் வெற்றிவேல்**

அவர்கள் கடந்த (11.07.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொடர்பு:
**077 929 8865**

*பிரிவால் துயருறும் :*
சுதர்சன் மயூரிகா
நாதன் குடும்பம்
சிவசங்கர் குடும்பம்

(ஏ.36147) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
08 • 01 • 1939



இறப்பு
11 • 07 • 2023

**திருமதி தம்பியையா இராசேஸ்வரி**

அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பியையா இராசேஸ்வரி கடந்த (11.07.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பியையா (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், வித்தியாதரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), அகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவா (வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை - மானிப்பாய்), நவயோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசாலினி (மாணவி - யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), அட்சரனி (மாணவி - யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), நிலானி (பிரான்ஸ்), நித்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, வதனராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை.
(CS/51230)AH-1


தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு நிர்ணய விலை உறுதி செய்து தாருங்கள்



**கிளிநொச்சி, ஜூலை 14**

**விவசாயிகளின் வாழ்வாதாரம் கருதி நெல் சந்தைப்படுத்தல் சபைகளுக்கு நிதியொதுக்கீடு செய்து மாவட்டந்தோறும் நெல் கொள்வனவுக்கான நிர்ணய விலையை உறுதி செய்யவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நெல்லுக்கான விலையை உறுதிசெய்யுமாறு கிளிநொச்சியில் விவசாயிகளின் பங்கேற்புடன் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் கையளிக்கப்பட்ட மனுவை மேற்கோள்காட்டி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் அதிக நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படும் விவசாய மாவட்டமான கிளிநொச்சியில், நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஆளுகையில் ஏழு நெற்களஞ்சியங்கள் உள்ளன. ஆனபோதும் அவற்றுக்கு உரிய நிதியொதுக்கீடின்மை காரணமாக விவசாயிகளிட மிருந்து நெல் கொள்வனவு செய்யப்படவில்லை.

அதனால் மிகக்குறைந்த விலைக்கே நெல்லை விற்பனை செய்ய வேண்டியுள்ளதால் நெற்செய்கையை மட்டுமே நம்பியுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்தரித்து நிற்கின்றனர்.

இந்த ஆண்டு சிறுபோகத்தில் கிளிநொச்சியில் 16 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், ஏக்கர் ஒன்றின் அறுவடை அண்ணளவாக 2 மெற்றிக் தொன் என கணிக்கப்படின், சிறுபோக அறுவடையில் மட்டும் கிளிநொச்சி 32 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

அரிசி இறக்குமதியால் ஏற்பட்ட நெல்லின் விலை வீழ்ச்சியை எதிர்கொள்ள முடியாதநிலையிலுள்ளவிவசாயிகள், தற்போது நெல்லுக்கு உரிய விலையுமின்றி விற்பனையுமின்றி நெல்லை தேக்கி வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விவசாயிகளின் வாழ்வாதாரம் கருதி, மாவட்டம் தோறும் நெல் கொள்வனவுக்கான நிர்ணய விலையை ஜனாதிபதி உறுதி செய்யவேண்டும் - என்றுள்ளது.

(ச-113)




## விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவாம்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் ஒரு கிலோகிராம் நெல்லை 95 ரூபா வீதம், விவசாயி ஒருவரிடமிருந்து 5 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததனால் பெரும் நெருக்கடியை சந்தித்துவருகின்றோம். இதற்குத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என கமக்கார அமைப்புகள் சுட்டிக்காட்டின.

அதற்கு குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில்,

இன்று வியாழக்கிழமை (நேற்று) தொடக்கம் ஒரு கிலோ நெல்லுக்கு 95 ரூபா விலையை நிர்ணயம் செய்து விவசாயியொருவரிட மிருந்து 5 ஆயிரம் கிலோ நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், கிளிநொச்சி விவசாய அமைப்புகள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ச-113)

### வடக்கு...

அவற்றில் யாழ்ப்பாணத்துக்கான 22 பேருந்துகள் நேற்றையதினம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டன.

ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் நேற்று வியாழக்கிழமை இந்தப் பேருந்துகள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு கையளிக்கப்பட்டன.

கடற்றொழில்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய்பாஸ்கர், இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ-ம,125,20,27,66,26)

### நாட்டைக்...

கட்டுப்படுத்துவதுடன் அரசாங்க வருமானத்தை ஈட்டுவதற்கான முறையான புதிய வழிமுறைகள் உடனடியாக அறிமுகப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாவிலிருந்தும் அதிகபட்ச பெறுமதி பெறப்படவேண்டும். ஆனால், அது பெரும்பாலும் அரச செலவின செயற்பாடுகளில் முன்னெடுக்கப்படுவதில்லை. அரச வருமானத்தை மறப்பது மாத்திரமன்றி எந்தவித பலனுமற்ற நடவடிக்கைகளுக்காக அரச நிதி கட்டுப்பாடற்ற விதத்தில் செலவு செய்யப்படுவதும் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழி வகுத்தது. அத்துடன், கடந்த இரண்டு. மூன்று வருடங்களாக இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்படாமையே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிதிப் பிரச்சினைகளுக்கு பிரதான காரணம். வருமான வரி மற்றும் அரச நிதி நிலைமை குறித்து ஆராய தற்போது நாடாளுமன்றத்தில் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன - என்றார்.

(அ-ம-22)

### சிறுவனைக்...

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

4ஆம் தரத்தில் கல்விகற்கும் அந்தச் சிறுவன் குழப்படியில் ஈடுபட்டான் என்பதற்காக, அவனுடைய பெற்றோர் சங்கிலி ஒன்றால் கட்டிவைத்து கொடூரமாகத் தாக்குதல்நடத்தியுள்ளனர் என்று கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே சிறுவனின் பெற்றோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுவன் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-125)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 • 10 • 1944



மறைவு 26 • 06 • 2022

**அமரர் விசாகரத்தினம் சின்னத்துரை**

கடந்த (26.06.2022) புதன்கிழமை சிவபதமடைந்த எம் அன்புச் சகோதரியின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நாளை (15.07.2023) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**“ எம்மை பிரிந்த எம் இதய மலரை நாம் என்றும் மறவோம் ”**

(CS 1234) (3/6)

**நெற்கொழு வீதி,**
**ஊரிக்காடு,**
**வல்வெட்டித்துறை**

**குடும்பத்தினர்.**
**076 469 8643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். முற்றவெளியில்

# சனி - ஞாயிறு இரு தினங்கள் 'க்ளோகல்' கண்காட்சி

## ஊழியர் சேமலாப நிதி சேவையும் மக்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் 'க்ளோகல் 2023' எனும் தொனிப் பொருளிலான கண்காட்சி நாளை 15ஆம் திகதி சனிக்கிழமையும் மறு நாள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யும் காலை 9 மணிமுதல் யாழ்ப்பா ணம் முற்றவெளி அரங்கில் நடை பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் தொழில் அமைச்சின் கீழான சகல திணைக்க ளங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிய கம் மற்றும் மத்தியவங்கி என்பவற் றின் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் இந்தக் கண்காட்சியினூ டாக மக்களுக்கு ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக சேவையை வழங்குவ தற்கு தொழில் திணைக்களம் அவதா னம் செலுத்தியுள்ளது.

அதன்படி இதில் ஊழியர் சேமலாப நிதி பதிவுகளை பரிசீலித்தல், ஊழியர் சேமலாப நிதி பதிவு செய்யாத உறுப்பி னர்களை பதிவு செய்தல், விரலடையா ளங்களை பதிவுசெய்தல், பெயர் மற் றும் பதிவுகளில் தவறுகள் காணப்ப டின் திருத்தம் செய்தல், ஆலோசனை சேவைகள் என்பன வழங்கப்படவுள் ளன.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பான தகவல்களை பரிசீலிக்க வருவோர் அடையாளத்தை உறுதிப்படுத்த தே.அ.அட்டை எடுத்து வருதல் வேண் டும். அதேவேளை பெயரில் திருத்தங் களை மேற்கொள்ள வருவோர் அது தொடர்பான உறுதிப்படுத்தல் கடி தத்தை பெற்றுவருதல் வேண்டும்.

இந்தக்கண்காட்சியில் வடக்கு மாகாண இளையோர் பங்கேற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற் சிகள் உள்ளிட்ட பல்வேறு சந்தேகங் கள் மற்றும் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்று வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் நிவே திகா கேதீசன் அறிவித்துள்ளார். (ச)

காட்டினார்கள். டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் கடந்த 10ஆம் திகதி முதல் நாடு தழுவிய ரீதியில் போராட்டங் களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே இந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-66,20)

### ஓகஸ்ட்...

ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த ரயில் சேவைக்காக ஒருவழிப் பயணக்கட்டண மாக 4 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள் ளது என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அநுராதபுரம் தொடக்கம் ஓமந்தை வரை யிலான ரயில் பாதைகள் திட்டமிட்ட காலத்துக்கு முன்பாகவே திருத்தப்பட்டுள் ளன. நல்லூர் உற்சவத்தைக் கருத்திற் கொண்டே துரிதமாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் அநுராதபுரம் தொடக்கம் மாஹோ வரையிலான தண்டவாள திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தத் திருத்தங்களின் பின்னர் ரயில் பயணத் தின் நேரம் சுமார் ஒரு மணித்தியாலம் குறையும்.

இதேவேளை - ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் அதிசொகுசு ரயில் சேவையை ஆரம்பிக்கவுள்ளோம். பாது காப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தற் போது பொருளாதார நெருக்கடி என்ப தால், குறைந்த செலவில் கடவைக ளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்ப டும் - என்றார். (அ-ம-125)

### யாழ்- கொழும்பு...

5 மாதங்களின் பின்னர் நேற்றைய தினம் பரீட்சார்த்த ரயிலொன்று கொழும் பிலிருந்து வந்தது. அதைத் தொடர்ந்தே நாளைமுதல் யாழ்ப்பாணம் கொழும்பு இடையிலான ரயில் சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

அநுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரையிலான நவீன மயமாக்கப்பட்ட ரயில் பாதைக்காக இந்திய அரசாங்கம் 3 ஆயிரம் கோடி ரூபாவை வழங்கிய நிலையில், இந்தத் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சார்த்த ரயிலில் வந்திருந்த போக்கு வரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்திய அரசாங்கத்தின் நிதியுதவிக்கு நன்றி தெரிவித்தார். கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட் ராஜ் ஜெயபாஸ்கர் உள்ளிட்ட பலர் நிகழ் வில் கலந்துகொண்டனர். (அ-ம-27,125,66,20)

### அறைக்குள்...

மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். திடீர் அதிர்ச்சியே அவருடைய இறப்புக் குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவில் வீடொன்றின் அறையில்துணுக்காயைச் சேர்ந்த 31 வயதான மருந்துப்பொருள் விற்பனைப் பிரதிநிதியான இளைஞர் வாடகைக்குத் தங்கியுள்ளார். நேற்றுக் காலை அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். அந்த வீட்டில் மற்றைய அறையில் வாடகைக்கு தங்கியிருக்கும் ஒருவரை [illegible] பொலிஸார் வாக்குமூலம் வழங்குவதற்காக யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துள்ளனர்.

அங்கு சென்ற அவர் விசாரணைக்காக காத்திருக்கும்போது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணை களை யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண் டார். (அ-ஒ.26)

### சமஷ்டிப்...

அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது இவ் வாறு அமைச்சர் ரணதுங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் அனுப்புவது குறித்து அரசின் நிலைப்பாடு தொடர்பாக ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் நிகழும். இலங்கை தொடர் பாக இந்தியத் தரப்புக்குப் பல விடயங் கள் தெரிவிக்கப்படும். குறிப்பாக இந் தியா, தமிழ் மக்களின் விடயம் தொடர் பில் அதிக கவனம் செலுத்துகின்றது. இதனால், தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட் டங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களுக்கு ஜனாதிபதி அதிக முக்கி யத்துவம் கொடுத்து அவற்றை இந்தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரத மருக்கு முட்டிமோதிக் கொண்டு கடிதம் அனுப்புவது பயனற்றது. அரசியல் இலாபம் கருதியே தமிழ்க் கட்சிகள் இவ் வாறு நடந்துகொள்கின்றன. 13ஆவது திருத்தம் நடைமுறையாவது உடனடியா கச் சாத்தியமற்றது. நாடாளுமன்றத்தின் மூலமே இது அனுமதிக்கப்பட வேண் டும். இருக்கின்ற அரசமைப்பை மறுசீர மைத்து அல்லது புதிய அரசமைப்பு மூலம் நாட்டு மக்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்துக்குள் வழங்குவார்' - என்றார். (அ-ம-22)

### சமஷ்டியைக்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தி யாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள் ளவுள்ள நிலையில், ரணிலுடனான சந்திப்பின்போது இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி உள் ளிட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் எழுதியுள்ளன. தமிழ்க் கட்சிகளின் கடிதத்துக்கு தென்னிலங் கையில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையிலேயே பிரதமர் தினேஷ் குண வர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, சமஷ்டி உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைப் பதற்கும் வலியுறுத்துவதற்கும் தமிழர்க ளுக்குத் தார்மிக உரிமையுண்டு. அத னால் அவர்களின் கோரிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடுவதோ அல்லது கோரிக்கைகளை உதாசீனம்செய்வதோ ஏற்கக்கூடிய செயல் அல்ல. ஆனால், இலங்கையில் எவ்வாறான அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்படும் என் பதை நாடாளுமன்றமே தீர்மானிக்கும் - என்றார். (அ-ம-22)

### சர்வதேச...

கொக்குத்தொடுவாயில் தண்ணீர்க் குழாய் புதைப்பதற்காக கடந்த மாதம் 29ஆம் திகதி மண்ணைத் தோண்டிய போது மனித எச்சங்களும், ஆடைகளும் மீட்கப்பட்டன. இதையடுத்து, அந்தப் பகுதி பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறி விக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக கடந்த 6ஆம் திகதி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போதும் பெருமளவான உடல் எச்சங்கள் மீட்கப்பட்டன. அவை 12 பேருடையவை யாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட் டது. புதைகுழியின் இட அமைவு சரிவர அடையாளப்படுத்தப்படாத நிலையில் அகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டு, தொடர்ச்சியான நடவடிக்கைகள் தொடர் பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத் தில் நேற்று வியாழக்கிழமை கலந்துரை யாடல் இடம்பெற்றது. இதில் சட்டமருத் துவ அதிகாரிகள், துறைசார் அதிகாரி கள், சட்டத்தரணிகள், காணாமல் ஆக் கப்பட்டோரைத்தேடும் உறவுகளின் பிரதி நிதிகள் எனப் பலதரப்பட்டோர் பங்கேற் றனர். சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்தி ரன், புதைகுழி அகழ்வு சர்வதேச நியமங் களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு அதன் தரம் எவ்வாறு அமையவேண்டும் என்றும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள் ளார். இதனையடுத்து அவற்றை உள்ள டக்கியதாகவே இலங்கையின் புதைகுழி அகழ்வுக்கான தரநிர்ணயம் இருப்பதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதைகுழி அகழ்வின்போது சர்வதேச மேற்பார்வையாளர்கள் பங்கேற்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்று நீதி வான் தெரிவித்துள்ளார்.

அகழ்வு நடவடிக்கைகளை தொல் பொருள் திணைக்களமே முன்னெடுக் கும் என்று தெரிவிக்கப்பட்டதற்கு காணா மல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவி னர்களின் பிரதிநிதிகள், தொல்பொருள் திணைக்களத்தின் மீது நம்பிக்கை யில்லை என்று தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அந்தத் திணைக்களத் தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவல கத்திலுள்ள தமிழ் அதிகாரிகளை நிய மிக்கவேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டது.

புதைகுழி அகழ்வுக்கான நிதிமூலம் தொடர்பில் ஆராயப்பட்டது. இறுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தி டம் கோருவதற்கு முடிவு செய்யப்பட்டது. அந்தப் பணியகமும் வெளிவிவகார அமைச்சின் ஊடாகவே நிதியைப் பெற லாம் என்பதால் நிதி தொடர்பில் நிச்சய மற்ற நிலைமையே காணப்படுகின்றது. இருப்பினும் இரு வாரங்கள் அகழ்வுப் பணி மேற்கொள்வதற்குரிய திட்டமதிப் பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு புதைகுழி அகழ்வுடன் தொடர்புடைய திணைக்க ளங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்டமருத்துவ அதிகாரி ஒருவர் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்க மாட்டார் என்றும் இதற்காக மருத்துவ அதிகாரிகள் குழு நியமிக்கப்படும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

### நிரந்தர...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் - பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள, வடக்கு மாகாண சுகா தார சேவைகள் திணைக்கள அலுவல கத்துக்கு முன்பாக அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தற்கா லிகப் பணி நிமித்தம் வழங்கப்படுகின்ற 22 ஆயிரம் ரூபா ஊதியம் தமது வாழ்க் கைச் செலவுக்குப் போதாது என்றும் ஊதிய அதிகரிப்புடன் தமது பணிகளை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்

# 13 ஆவது திருத்தச் சட்டமும் இந்தியாவின் வகிபாகமும்

## தமிழ்க் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம் மற்றும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அனுசரணையில் நடத்தப்படும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக சட்டபீடத் தலைவர் கோசலை மதன், அரசிறைப் பகிர்வுக்கான ஆற்றலை மேம்படுத்தல் நிறுவனத்தின் முன்னாள் ஆலோசகர் சி.கிருஷ்ணானந்தன், கிழக்கு மாகாணசபை முன்னாள் செயலாளர் கந்தப்பு பத்மநாதன், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் முன்னாள் செயலர் இராசையா பேரின்பநாயகம், அகில இலங்கைத் தமிழர் மகாசபைத் தலைவரும் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் செயலாளருமாகிய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.தவராசா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் அமைச்சர் சி.சந்திரகாந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர் திருநாவுக்கரசு சிறீதரன், சமத்துவக் கட்சித் தலைவர் மு.சந்திரகுமார், ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலாளர் இராஜநாதன் பிரபாகரன், புளொட் சார்பாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், அகில இலங்கைத் தமிழர் மகாசபை பிரதிநிதி அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

கலந்துரையாடலின் இறுதியில் நன்றியுரையை அதிகாரப் பகிர்வுக்கான இயக்கத்தின் தலைவர் கலாநிதி கா. விக்னேஸ்வரன் ஆற்றவுள்ளார். (ய)

## தமிழ் அரசுக் கட்சியின் செயலர் வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் எக்ஸ்.குலநாயகம் வீட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை பணம் மற்றும் கைத்தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு அருகில் உள்ள அவரது வீட்டிலேயே திருட்டுச் சம்பவம் பதிவானது.

வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த வேளையிலேயே இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் சிறிய தொகைப் பணமும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125-20)

## மூதாட்டியொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 14

தனிமையில் வசித்துவந்த மூதாட்டியொருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். நாகனாதன் சிந்தாமணி (வயது -75) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் 'டின்னர்' அருந்தியதால் மூதாட்டி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிமையால் ஏற்பட்ட மன விரக்தியால் அவர் டின்னர் அருந்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதுடன், இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

## அரசமைப்புப் பேரவை: விசேட கூட்டம் இன்று

கொழும்பு, ஜூலை 14

அரசமைப்புப் பேரவையின் விசேட கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

## 11 பேரைக் காவு வாங்கிய வீதியில் அபாயக் குறியீடு

கொழும்பு, ஜூலை 14

பொலநறுவை மன்னம்பிட்டிய வீதியில் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் வீதிச் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வீதி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இந்த வீதியிலுள்ள கொட்டாலிய பாலத்தில் பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்ததுடன் 41 பேர் காயமடைந்தனர்.

இந்தநிலையிலேயே குறித்த வீதியிலுள்ள வீதிச் சமிக்ஞைகள், அபாயச் சின்னங்கள் மற்றும் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)

*மீண்டும் பிடிபட்ட இந்திய மீனவர்*

## நீதிமன்றால் தண்டனைக் காலம்; குறைக்கப்பட்டதனால் விடுதலை

கடந்த ஆண்டு கைதாகி ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையில் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர், இந்த ஆண்டு மீண்டும் கைதாகியிருந்ததால் ஊர்காவற்றுறை நீதிமன்றால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், யாழ். மேல் நீதிமன்றால் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

விடுதலையான மீனவர் மீண்டும் இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையில், விதிக்கப்பட்ட இரண்டு 6 மாத கால சிறைத்தண்டனையையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், மீளவும் அத்துமீறிய குற்றத்துக்காக 8 மாத சிறைத்தண்டனையுமாக மொத்தம் 14 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்திய மீனவரால் யாழ். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. விசாரணையில் அவருக்கு 3 மாதகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் கடந்த மார்ச் மாதம் கைதானதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் அவர் மூன்று மாத சிறைத்தண்டனையை நிறைவு செய்துள்ளதாகக் கருதி கடந்த 5ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ-இ)


**மேல் மாடி வீடு விற்பனைக்கு**

✓யாழ். மானிப்பாயில் 2 பரப்பில் அமைந்த லக்சறி வீடு (மேல்மாடி) சகல தளபாட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
✓4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 102 2763

**மணமகன் தேவை**

யாழ். R.C. மதத்தைச் சேர்ந்த 1989 பிறந்த மணமகளுக்கு அரச தொழில் புரியும் மணமகன் தேவை யாழில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கிரகபாவம் 19 3/4. விருச்சிகராசி. நட்சத்திரம் அனுசம் (V)

076 260 5156

**மணமகள் தேவை**

யாழ்.RC மதத்தைச் சேர்ந்த தனியார் வங்கியின் வாகன பொதுக்காப்புறுதி கள உத்தியோகத்தராகப் பணியாற்றும் 1986ஆம் ஆண்டு பிறந்த மிதுனராசி திருவாதிரை நட்சத்திரம் 76 பாவமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

077 008 3491

**சிறுநீரகம் தேவை**

சிறுநீரக நோயால் பாதிக்கப் பட்டுள்ள $B^+$ இரத்த வகையைச் சேர்ந்த 38 வயது ஆணுக்கு சிறுநீரகம் தேவை.

தொடர்புக்கு:
077 6700 569
077 0687 096

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

ஆங்கில பேச்சு பயிற்சி மற்றும் கணினிகற்கை நெறி இலவசம் ஏதாவது ஒரு கற்கைநெறியை கற்போருக்கு

UASL . UK இன் ISO Certificate

- Diploma in Computer Hardware
- Diploma in Television Media and Mass Communication
- Diploma in Aari Work

Victory
No.100, 2nd Floor,
Manipay Road, Jaffna.

தொடர்பு: 077 028 8711

(cs-25502) (N.I)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.